## New Swarnima Special Scheme for Women

## பெண்களுக்கான புதிய ஸ்வர்னிமா சிறப்பு திட்டம்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் தகுதிவாய்ந்த பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த பெண்கள் சுயமாக தங்களைத் தாங்களே சார்ந்திருக்கும் பக்குவத்தைத் தங்களுக்கிடையே வளர்த்துக்கொள்வதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். ”புதிய ஸ்வர்னிமா” வின் சிறப்பம்சங்கள் :

ஒரு பயனாளிக்கு அதிகபட்ச கடனாக ரூ.50,000/- மற்றும் ஒரு வருடத்திற்கு 4% வட்டி விதிக்கப்படும். பயனாளிப் பெண்கள் இத்திட்டத்திற்கென தன் சொந்தப் பணமாக எதுவொன்றும் முதலீடு செய்யத் தேவை இல்லை.

**ELIGIBILITY :**

**தகுதிகள் :**

இந்த திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு, மத்திய/மாநில அரசுகளினால் அங்கீகரிக்கப்பட்டவாறு பின்தங்கிய வகுப்பினரைச் சார்ந்த பெண்ணாக இருக்க வேண்டும்.

கிராமப்புறத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரரின் குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.20,000/- க்கு குறைவாகவும், நகர்ப்புற விண்ணப்பதாரரின் குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.27,500/- க்கு குறைவாகவும் இருக்கவேண்டும்.

**PATTERN OF FINANCING:**

**நிதியின் வகைமுறை**

என்பிசிஎப்டீசி கடன் 95%
எஸ்சிஏ பங்களிப்பு 5%
பயனாளியின் பங்களிப்பு இல்லை

**RATE OF INTEREST : 4% p.a.**

வட்டி விகிதம் : 4% ஆண்டொன்றுக்கு

செலுத்தும் காலம்: திட்டத்தின் தன்மையைச் சார்ந்ததாகும். இருப்பினும் அதிகப்பட்சமாக 10 ஆண்டுகளுக்குள் திருப்பிச்செலுத்த வேண்டும்.